08.02.2024

அதிமேதகு ரணில் விக்ரமசிங்க,
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி,
ஜனாதிபதி செயலகம்,
காலி முகத்திடல் நிலைய வீதி,
கொழும்பு 01.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களே,

**சிவில் சமூக அமைப்புகள் இலங்கையின் திறந்த அரசாங்க பங்குடைமை (OGP) திட்டத்திலிருந்து விலகிக்கொள்கின்றன.**

இலங்கையின் திறந்த அரசாங்க பங்குடைமை (OGP) செயல்முறையில் ஈடுபட்டுள்ள சிவில் சமூக அமைப்புகளின் இணைப்பாளர்கள் என்ற வகையில், இலங்கையின் மூன்றாவது தேசிய செயற்திட்டத்தை (NAP) உருவாக்க ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து மேற்கொண்டிருக்கும் சிவில் கூட்டு முயற்சிகளிலிருந்து விலகுவதற்காக சிவில் சமூக அமைப்புகள் மற்றும் இணைப்பாளர்கள் ஒன்றிணைந்து தீர்மானித்துள்ளது. இந்த முடிவானது குழுவாக தீர்க்கமான முறையில் பரிசீலிக்கப்பட்ட பின்னர், இலங்கையின் திறந்த அரசாங்க பங்குடைமையின் (OGP) அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணாக நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆபத்தான முன்னெடுப்புகளுக்குப் பதிலளிக்கும் விதமாக எடுக்கப்பட்டது.

இலங்கையின் சிவில் சமூக அமைப்புகள் 2015ஆம் ஆண்டு முதல் திறந்த அரசாங்க பங்குடைமை OGP செயல்முறையில் ஈடுபாட்டுடன் பங்கேற்று வருவதுடன், வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் பங்கேற்பு என்பவற்றைக் கொண்ட ஆட்சிமுறைக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்து வருகின்றன. முன்னைய இரண்டு தேசிய செயற்திட்டங்களின் தயாரிப்பின் போது அரச துறையில் நிர்வாக இடமாற்றங்கள் மற்றும் அரசியல் விருப்பமின்மை உட்பட பல சவால்களை எதிர்கொண்டது. அத்தகைய சவால்கள் இருந்தபோதிலும், வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தொடர்ச்சியான ஆர்வமும் அர்ப்பணிப்பும் காணப்படாத போதிலும், சிவில் சமூக அமைப்புகள் மூன்றாவது தேசிய செயற்திட்டத்தினை உருவாக்க தமது ஈடுபாட்டை வெளிப்படுத்தின.

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள், குறிப்பாக நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றுவது மற்றும் பரவலான எதிர்ப்பையும் மீறி பயங்கரவாத எதிர்ப்பு மசோதா அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகள் என்பன, சிவில் சமூக வெளியை அடக்குவதற்கும் அடிப்படை சுதந்திர மீறலுக்கும் எதிராக இந்தக் கொள்கை ரீதியான நிலைப்பாட்டிக்கு எம்மை நிர்ப்பந்தித்துள்ளன. நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு மசோதா என்பவை, குறிப்பாக தகவல் பகிர்தல், கேள்வி எழுப்புதல், விமர்சனங்கள், கருத்து வேறுபாடு மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு ஆகியவற்றைத் தடுக்கும் திறன் குறித்து கரிசனைகள் எழுந்துள்ளன.

இந்த சட்டமூலங்களை மறுபரிசீலனை செய்யுமாறு நாம் அரசாங்கத்திடம் வேண்டுகோள்விடுத்தபோதிலும், உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்ட பல திருத்தங்களை கருத்திற் கொள்ளாமல் இந்நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலமானது அண்மையில் நிறைவேற்றப்பட்டது. அரசியலமைப்பிற்கு முரணான சட்டங்களை இயற்றும் பாராளுமன்ற முயற்சிகளுக்குப் பதிலளிக்கும் வகையில் நீதிமன்றங்கள் மூலம் சட்டரீதியான தீர்வுகளைப் பெறுவதற்கான அரசியலமைப்புப் பாதுகாப்பை இது மீறுகிறது.

இது முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு அரசியலமைப்பு ஜனநாயகத்தின் அடிப்படையான குறுக்கீடு கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலைகளை மீறும் செயற்பாடாகும். இலங்கை தற்போது சந்தித்து வரும் ஜனநாயகப் பின்னடைவில் மேலும் ஒரு ஆபத்தான படிநிலையைக் குறிக்கிறது.

மேலும், இத்தகைய அடக்குமுறை சட்டங்களை அறிமுகப்படுத்துவது திறந்த அரசாங்க பங்குடைமையால் கொள்கைகளை மீறும்செயலாகும். இது திறந்த அரசாங்க பங்குடைமை OGP ஊக்குவிக்கும் திறந்த ஆட்சி, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளைப் புறக்கணிக்கின்றது. அத்தோடு, சிவில் சமூக அமைப்புகள் (CSO) இந்த செயல்முறையில் கொண்டிருந்த வரையறுக்கப்பட்ட நம்பிக்கையையும் இது மீறுகிறது. அரசாங்கக் கொள்கைகளையும் திட்டங்களையும் வரையறுத்தல், வடிவமைத்தல் மற்றும் கண்காணிப்பதில் பொதுமக்கள் சுதந்திரமாகப் பங்கேற்க வேண்டுமெனில், கருத்துச்

சுதந்திரம், கருத்து வேறுபாடு மற்றும் ஆக்கபூர்வமான உரையாடலை ஊக்குவிக்கும் சூழல் இருக்க வேண்டும். சமூகப் பிரச்சினைகள் தொடர்பான நிகழ்நிலை வெளிப்பாடு மற்றும் விவாதங்கள் மீதான கட்டுப்பாடுகளும் அவை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்களாக கருதப்படுவதும் இந்த இன்றியமையாத சூழலைத் தடுக்கின்றன.

ஜனநாயகக் கொள்கைகளில் இருந்து விலகுவது, பொதுமக்களின் அடிப்படை சுதந்திரங்களை நிலைநிறுத்துவதற்கும், ஆட்சியில் உள்ளடக்கிய அணுகுமுறையைப் பேணுவதற்கும் அரசாங்கத்தின் பங்கேற்பு மற்றும் அர்ப்பணிப்பு பற்றிய கேள்விகளை எழுப்புகிறது. திறந்த அரசாங்க பங்குடைமை (OGP) செயல்முறையின் மூலம், அரசாங்கம் சிவில் சமூகத்துடன் ஒரு குறியீடாக மட்டுமே ஈடுபடுகிறது என்று தோன்றுகிறது.

எனவே, நிகழ்நிலை காப்புச் சட்டம் மற்றும் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களிலிருந்து அரசாங்கம் உடனடியாக பின்வாங்க வேண்டுமென நாம் அரசை வலியுறுத்துகிறோம். திறந்த அரசாங்க பங்குடைமை (OGP) திட்டத்திலிருந்து விலகுவதற்கான இந்த தீர்க்கமான முடிவை எடுத்தாலும், OGP யின் குறிக்கோள்களுக்காக நாம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

அத்தோடு, அரசாங்கம் தனது தெளிவான நடவடிக்கை மூலம், வெளிப்படைத்தன்மை, பொறுப்க்கூறல், பங்கேற்பு என்பவற்றுடன் கூடிய ஆட்சிக் கொள்கைகளுக்கு நல்லெண்ணத்தோடு உறுதியளித்து, பொதுமக்கள் மற்றும் சிவில் உரிமைகளுக்கு உகந்த சூழலை உருவாக்கினால், OGP செயற்பாட்டில் நாங்கள் மீண்டும் ஈடுபடத் தயாராக உள்ளோம்.

உங்கள் உண்மையுள்ள,

நதிஷானி பெரேரா (இணைப்பாளர்),
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா.

கலாநிதி வின்யா ஆரியரத்ன (இணைப்பாளர்)
தலைவர்,
சர்வோதய ஷ்ரமதான இயக்கம்.

உள்ளடக்கப்பட்டுள்ளது: திருமதி. சந்திம விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர், ஜனாதிபதி செயலகம்

திருமதி. ஸ்ரேயா பாசு, துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் - தேசிய ஆதரவாளர், திறந்த அரசாங்க பங்குடைமை